MANUPATRA DV

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 328 /2021</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2023- ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 - ஆம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது. | | | | | |
| பெயர் | : | சாமிநாதன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ரெங்கசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | மூங்கில்பாடி | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 40 /2023 |

பிரதி**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1. எனக்கு எழுத படிக்க தெரியும் . நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியும் . நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் தாவா இடத்தில் காம்பவுண்ட் சுவர் கட்ட முற்பட்டபோது அதை பிரதிவாதி வந்து தடுத்ததாக வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . நான் எனது வழக்குரையில் எந்த பகுதியில் காம்பவுண்ட் கட்ட முற்பட்டபோது பிரதிவாதி வந்து தடுத்தார் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் நான் வீட்டை சுற்றிலும் காம்பவுண்ட் கட்ட முற்பட்டபோது பிரதிவாதி தடுத்ததாக கூறியுள்ளேன்.

2. நான் எனது வழக்குரையிலோ அல்லது எனது முதன்மை வாக்குமூலத்திலோ எனக்கு எவ்வளவு இடம் பாத்தியப்பட்டது என்றோ அதில் எவ்வளவு இடத்தில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . நான் எனது வழக்குரையில் தாவா இடத்தை சர்வேயர் வைத்து அளந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சர்வேயர் அளவுபடி எத்தனை அடியில் வீடு இருந்தது மீதமுள்ள இடத்தின் அளவு எவ்வளவு என்பது பற்றி சர்வேயர் கொடுத்த

வரைபடம் இவ்வழக்குரையோடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது வீட்டிற்கு ஒரு வாசற்படி என்றால் சரிதான் . பின்புறம் எந்த வாசலும் கிடையாது என்றால் சரிதான் . நான் சொல்வதுபோல் எனது வீட்டின் நான்கு புறமும் இடம் இருந்திருந்தால் நான் பின்புறம் வாசற்படி வைத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எனக்கு இடம் இல்லாததால் தான் பின்புறம் நான் வாசற்படி வைக்கவில்லை என்று சொன்னால் ரோட்டின் வழியாக என் வீட்டிற்கு பின்புறம் வந்துவிடலாம்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM KUNNAM